உள்ளே

போக்கு காட்டுகிறதா போனஸ் பிரச்சனை?

ELITE MANAGEMENT CONSULTING SERVICES

# தொழில் மலர் - 3

## நலம் தரும் தீபாவளி

ஒவ்வொரு நிறுவனமும் பலவிதமான மக்களாலும் சமுகத்தாலும் இணைக்கப்பட்டு உள்ளது. நிறுவனம் வேறு சமூகம் வேறு என்பது இல்லை. இரண்டில் ஒன்று மாற்றம் அடைந்தாலும் அதற்கு ஏற்ப மற்றொன்றிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

அதிலும் முக்கியமாக தீபாவளி போன்ற முக்கியமான பண்டிகைகள் தனித்துவமானது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளை கடந்து வெற்றிகரமாக இயங்கி கொண்டிருக்கும் அனைந்து நிறுவனங்களையும் இயங்கிக்கொண்டிருக்கும் சிறந்த மனிதர்களுக்கு இந்த தீபாவளி மலர் அர்பணிக்கப்படுகிறது. மக்கள் அனைவரும் தங்களது வியாபாரத்தில் சிறப்பான வளர்ச்சியை பெற Elite Management Consulting Services குடும்பத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.

**99406 00860**

## வியாபாரத்தின் நரகாசுரன்கள்

### முதல் நரகாசுரன் - Procrastination
### தள்ளிப்போடுவது



தள்ளிப்போடாதீர்கள், எதையும் தள்ளிப்போட சொல்லாதீர்கள்! நீங்கள் எதை எல்லாம் தள்ளி போடுகின்றீர்களோ அதுதான் உங்களுடைய வெற்றியையும் தள்ளிபோடுகிறது.

### இரண்டாவது நரகாசுரன் - Multitasking
### ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்வது



உண்மை என்னவென்றால் இதனால்

1. நம்முடைய வேகம் குறைகிறது.
2. அதிகமான தவறுகள் ஏற்படுகிறது.
3. மன அழுத்தம் அதிகரிக்கிறது.
4. தினசரி வாழ்வில் மகிழ்ச்சி குறைகிறது.
5. பணியாளர்கள் உடன் வெறுப்பு உண்டாகலாம்.

இவற்றையெல்லாம் தவிர்க்க உங்களுடைய வேலைகளை முறைபடுத்தினால் ஒவ்வொரு படியாக நாம் வெற்றி அடையலாம் ஏனெனில் ஒரே நேரத்தில் பல படிகளை ஏறுவது கடினம்.

### மூன்றாவது நரகாசுரன் - Saying Yes too much
### அனைத்திற்கும் சரி சொல்வது

அதுசரி ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டு விடும் என்று நினைத்து பெரும்பாலும் அனைவருக்கும் அனைத்திற்கும் சுமூகமாக இருக்க நினைப்பது இதன் மூலம் அனைவரையும் திருப்திப்படுத்த நினைத்தாலும் கடைசிவரை நமக்கு திருப்தி இல்லாமல் போய் விடுகிறது.




Elite Management Consulting Services

## நான்காவது நரகாசுரன் - Over Confidence
## அதீத நம்பிக்கை

**இத்தனை ஆண்டுகளாக கொடிகட்டி பறக்கும் நம் தொழிலில் யார் நம்மை வெல்ல போகின்றார்கள் என்று நினைப்பது, அப்படி நினைத்துவிட்டாலே நம்முடைய தோல்வியை சந்திக்க தயாராகிவிடுகிறோம்.**





## ஐந்தாவது நரகாசுரன் - Reacting to Criticism
## குறைகளை எதிர்கொள்வது

**இதனை கடந்து வராத தொழில் அதிபர்களே இருக்க வாய்ப்பில்லை, யார் நம் முன் நம்மை பற்றி குறைசொன்னாலும் அதனை சரி செய்ய முன் வந்தால் நம் தொழிலும் முன்னுக்கு வந்து விடும்..**

## ஆறாவது நரகாசுரன் - Office Depended
## அலுவலகமே கதி



**ஒரு நாள் கூட என்னால் அலுவலகத்திற்கு போகாமல் இருக்க முடியாது, என்று நீங்கள் இருந்தால் அதனை முதலில் மாற்றம் செய்யுங்கள். ஏனென்றால் வியாபாரத்தை பின்பற்றுவதுதான் நம் நோக்கமே தவிர அலுவலகத்தை அல்ல. இன்னும் சொல்ல போனால் நமக்கான அனைத்து தொழில் வர்த்தகமும் அலுவலகத்திற்கு வெளியேதான் பெரும்பாலும் நடக்கிறது.**



## ஏழாவது நரகாசுரன் - Time Based Work
## நேரத்தின் ஆதாரத்தில் வேலை செய்வது

**ஆள் கணக்கு, மணி கணக்கு பார்த்த காலம் போய் இப்போது வினாடிகளில் பறந்து கொண்டிருக்கிறது உலகம், இன்றும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை என்ற கணக்குகள் எல்லாம் இப்போது செல்லாது. சில மணிநேரங்களில் கூட அன்றைய முழு நாளுக்கான வேலைகளை முடித்து புதிய பரிமாணங்களுக்கு நேரம் ஒதுக்கும் போது மாற்றம் கொஞ்சம் வேகமாக வரும்.**

# போக்கு காட்டுகிறதா போனஸ் பிரச்சனை?

**வருடம் முழுதும் வேலைபார்த்தும் போனஸ் கூட வரவில்லையே ? இது உங்களது பணியாளரின் கேள்வி!**

**வருடம் முழுதும் வேலைபார்த்தும் ஒன்னும் மிச்சமில்லையே ? இது ஒவ்வொரு முதலாளியின் கேள்வி!**

**இரண்டு கேள்விக்கும் பதில் தர முடியுமா?
நிச்சயமாக முடியும்!**

**1. பணியாளர்களின் பங்களிப்பை அதிகப்படுத்த அவர்களது பங்களிப்பிற்கு ஏற்ற ஊதியங்களை நிர்ணயம் செய்யுங்கள்.**

**2. அதிகப்படியான நேர்மையான பங்களிப்பு அதிக வருமானத்தை தரும் என்பதை உறுதிப்படுத்துங்கள்.**

**3. அனைவரும் சமம் தான் ஆனால் மனதார வேலைசெய்பவருக்கும் கடமைக்கு வேலை செய்கின்றவருக்கும் இடையே வேறுபாட்டினை ஏற்படுத்துங்கள்.**

**4. உண்மையில் பெரும்பாலும் உண்மையாக உழைப்பை கொடுப்பவர்களுக்கு அதற்க்காக கிடைக்ககும் நியாமான ஊதியமே சிறப்பான செயல்பாடுகளுடன் செயல்பட வைக்கும் .**

**5. செயல்பாடுகளை கண்காணித்து அதனை முறையாக ஆவணப்படுத்தி அதனை அவர்களுக்கு உணர்த்தும் போது இன்னும் சிறப்பாக செயல்படுவார்கள்.**

**6. வருடம் முழுதும் கொடுக்கும் ஊதியத்தோடு அவர்களது பங்களிப்புக்கு ஏற்ப வருடாந்திர போனஸ் னையும் எடுத்து தனியே வைத்துவிட்டால் சுமையும் குறையும். பணியாளர்களும் சிறப்பாக செயல்படுவார்கள்.**

Elite Management Consulting Services

## எட்டாவது நரகாசுரன் - Doing Task Multitimes
## ஒரே வேலையை பல முறை செய்வது



நமக்கான வேலையின் முக்கியத்துவம் நமக்கு மட்டுமே தெரியும். அதனை மற்றவர்களுக்கு புரியவைப்பதில்தான் சிறப்பான நிர்வாகம் ஒளிந்திருக்கிறது. நமக்கு நேரம் இருக்கலாம் ஆனால் வெற்றி பல வாய்ப்புகளுக்கு காத்திருப்பதில்லை முந்திச் செல்லும் ஒருவருக்கு தான் கிடைக்கிறது. அனைத்தையும், அனைவரையும் முறையாக பயன்படுத்துவோம்.



## ஒன்பதாவது நரகாசுரன் - Mistake Finder
## குறைகளை மட்டுமே காண்பது

இவர தெரியாதா இவர் தான் நமக்குள்ள இருக்குற டிடக்டிவ் எப்பொழுதும் எல்லாவற்றிலும் குறைகளைமட்டுமே கண்டறியகூடியவர் இவரும் நிம்மதியாக இருக்கமாட்டார் இவரால் சுற்றி உள்ளவர்களும் நிம்மதியாக இருக்க மாட்டார்கள் இவரை முதலில் துரத்தி விட்டால் உங்களுடைய பணியாளர்களின் பங்களிப்பு பல மடங்கு அதிகரிக்கும்

## பத்தாவது நரகாசுரன் - Not giving Importants
## முக்கியத்துவத்தை உணராமல் இருப்பது



நம்முடைய தொழிலின் முக்கியமான தருணங்களில் நாம் தொழிலுக்கு தரவேண்டிய முக்கியத்துவம் குறையும் போது நமக்கு வர வேண்டிய வாய்ப்பையும் இழந்துவிடுகிறோம். நிகழ்காலத்தோடு எதிர்காலத்தையும் மனதில் வைத்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம் எனவே கவனக்குறைவு எனும் நரகாசுரனை இன்றே மாற்றி விடுங்கள்.

Elite Management Consulting Services

## பதினோராவது நரகாசுரன் - Following Competitors
## போட்டியாளர்களை அப்படியே பின்பற்றுவது!



போட்டியாளர்கள் என்ன செய்கின்றார்களோ அதை அப்படியே நம்முடைய தொழிலிலும் பின்பற்றுவது பணியாளர்களையும் பின்பற்ற வைப்பது, இதனால் நமக்கு சாதனை செய்த அளவிற்கு பெருமிதம் ஏற்பட்டாலும் அது உண்மையாக இருக்காது, எப்போதும் உருவாக்குவது தான் கடினம். பின்பற்றுவது எளிது ஆனால் உருவாக்கக்கூடியவர்கள் தான் எப்போதும் முன்னிலையில் இருக்கின்றனர். சொல்லப்போனால் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் மற்றவர்கள் தான் அவர்களை முன்னிலைபடுத்திவிடுகின்றனர் என்பதுதான் உண்மை.

## பனிரெண்டாவது நரகாசுரன் - Believing Words
## செயல்களை நம்பாமல் வார்த்தைகளை நம்புவது



கண்முடித்தனமாக சிலரை நம்புவதுண்டு, அப்படி நம்பிய அவர்களால் தான் நமக்கு பிரச்சனைகளே வரும். எனவே கூட்டி கழித்து பார்த்து விளக்கம் கேட்டுவிட்டால் அனைத்தும் நலமே! அதற்கு முக்கியமாக நம்பிக்கையின் ஆதாரத்தை விட நடவடிக்கையின் ஆதாரத்தில் முடிவுகளை மேற்கொள்வது நம் வளர்ச்சிக்கு நல்லது.

## பதிமூன்றாவது நரகாசுரன் - Blaming others
## மற்றவர்களை காரணம் காட்டுவது

வெற்றியாளர்கள் அவர்கள் செய்ய வேண்டிய காரியத்தை மட்டுமே பார்க்கின்றனர். சாமானியர்கள் அவர்களது செயல்களுக்கு காரணம் தேடுகின்றனர். இதுவரை காரணம் சொன்னவர்கள் காரியங்கள் செய்ததில்லை. காரியங்கள் செய்பவர்கள் யாரையும் காரணம் சொல்வதில்லை. எடுத்த காரியத்தில் எப்போது மற்றவர்களை காரணம் காட்டி குற்றம் சாட்டுகிறோமோ அப்போதே நம்முடைய பொறுப்பானது அங்கு குறைந்து விடுகிறது. இதுவரை நாம் வெற்றிபெற்ற இடங்களை ஆராய்ந்து பார்த்தால் முழுமையாக நம்முடைய ஈடுபாட்டின் வெளிப்பாடு அங்கு நிறைந்திருக்கும்..





## பதினான்காவது நரகாசுரன் - Telling Same things repeatedly
## திரும்ப திரும்ப பேசுற நீ

திரும்ப திரும்ப ஒரு விஷயத்தை நாம் சொல்ல நேர்ந்தது என்றால் கேட்பவர்களுக்கு போதிய திறன் இல்லை என்பதல்ல, நாம் இன்னும் சரியான முறையில் விளக்குவதற்கு முற்பட வேண்டும். ஒரே மாதிரியான வாழ்க்கை, ஒரேமாதிரியான உணவுகள் கூட நமக்கு பிடிக்காத போது ஒரே மாதிரியான வார்த்தைகள் கூட மற்றவர்களுக்கு நம்மீது வெறுப்பினை ஏற்படுத்தும்.

## பதினைந்தாவது நரகாசுரன் – Late coming to Office
## அலுவலகத்திற்கு தாமதமாக வருவது.

நாம் எதிர்பாக்கும் ஒத்துழைப்பு, பணியாளர்களின் ஆர்வம், மற்றும் நம் நிறுவனத்தின் மரியாதை அனைத்தும் நாம் அலுவலகத்திற்கு வரும் நேரத்தை பொறுத்தே அமைகிறது.. நாம் தரும் முக்கியத்துவத்தின் பிரதிபலிப்புதான் நாம் சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருவது. வந்துதான் பாருங்களேன்...





## பதினாறாவது நரகாசுரன் – Don't Read வாசிப்பு இன்மை

அனுபவங்களை நாம் எப்போதும் அனுபவித்துதான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது இல்லை. நம்முடைய வியாபாரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் நம் நம்முடைய சுய சிந்தனைகளோடு மற்றவர்களுடைய திறமைகளையும் அனுபவங்களையும் பல புத்தகங்கள் வழியாக தெரிந்து கொள்ளும் போது நம் வாழ்க்கையும் சரி தொழிலும் சரி சிறப்பாக மேம்படும்.

## பதினேழாவது நரகாசுரன் - Not setting a budget
## பட்ஜெட் போடாமல் இருப்பது

ஒரு நிறுவனத்தின் ஆரோக்கியமான இயக்கத்திற்கு பட்ஜெட் மிகவும் முக்கியம். பட்ஜெட் இல்லாத நிறுவனம் கயிறு இல்லாத பட்டம் போன்றது. நன்றாக பறந்தாலும் எப்போது எங்கு மாட்டிக்கொள்ளும் என்று தெரியாது.



Elite Management Consulting Services

## பதினெட்டாவது நரகாசுரன் - Negative Thinking
## எதிர்மறையாக சிந்திப்பது



நம் வியாபாரத்தில் முன்னேற்ற பாதையில் எதிர்மறை சிந்தனைகள் நம்மை அப்படியே தேக்கி வைத்து விடும். நம்முடைய வியாபாரம் என்னும் படகு சீராக செல்ல நேர்மறை சிந்தனைகள் என்ற துடுப்பு சரியாக இயக்கப்பட வேண்டும்..



## பத்தொன்பதாவது நரகாசுரன் - Not Having mentors
## தனக்கான வழிகாட்டிகள் இல்லாமல் இருப்பது

புதிதாக பயணம் மேற்கொள்ளும் போது பாதை தெரியாவிட்டால் அந்த பகுதியில் இருக்கும் ஒருவரிடம் எப்படி செல்வது என்று கேட்போம். அப்படி சரியான வழிமுறைகளை தெரிந்து கொண்டால் நமது நேரமும் உழைப்பும் சேமிக்கப்படும். அதேபோல் வியாபாரத்தில் சரியான வழிகாட்டிகள் கிடைத்தால் நமது முன்னேற்றம் விரைவாக ஏற்படும்.

## இருபதாவது நரகாசுரன் - Not spending time with Family
## குடும்பத்திற்காக நேரம் ஒதுக்காமல் இருப்பது



அதிக பணம் செலவு செய்து வீட்டை கட்டி விட்டு அதில் இருப்பதற்கு நேரம் ஒதுக்காமல் இருந்தால் எப்படி இருக்கும் ? அப்படி தான் நம் வியாபாரமும். நாம் உழைப்பதும் வியாபாரம் செய்வதும் நம் குடும்பத்திற்காகத்தான் ஆனால் அந்த குடும்பத்திற்காக நேரத்தை செலவு செய்யவில்லை எனில் நம் முடைய வெற்றிகளை யார்தான் கொண்டாடுவார்கள்? நம் நிறுவனத்தின் வெற்றி நம் குடும்ப உறுப்பினர்களையும், பணியாளர்களின் குடும்பத்தையும், வாடிக்கையாளர்களின் குடும்பத்தையும் மனதளவிலும் உடல் அளவிலும் ஆரோக்கியமாக வைத்திருப்பதில் தான் இருக்கிறது.



## இருபத்தொன்றாவது நரகாசுரன் - Not performing Individually
## சுயமாக செயல்படாமல் இருப்பது

வியாபாரத்தில் அனைவரது ஒத்துழைப்பும் தேவைதான், வாகனத்தின் அனைத்து பாகங்களும் முக்கியம் என்றாலும் அவை அனைத்தின் இயக்கத்தையும் கட்டுப்படுத்துவது இன்ஜின் தான். நம் நிறுவனத்திலும் நாம் இன்ஜினாக இருக்க வேண்டுமே தவிர ஒரு பாகமாக மட்டுமே இருந்துவிட கூடாது. நீங்கள் பலரிடம் ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் பெற்றாலும் முடிவுகளை எடுப்பதிலும் அதனை செயல்படுத்துவதிலும் சுயமாக இயங்கும் போதுதான் உங்கள் முன்னேற்றத்தின் வேகத்தை அதிகப்படுத்த முடியும்.

## இருபத்து இரண்டாவது நரகாசுரன் - Following wrong people
## தவறான மனிதர்களை பின்பற்றுவது



நாம் சுயமாக செய்யும் தவறுகளை விட வியாபாரத்தில் மற்றவர்களை பார்த்து செய்யும் தவறுகள் தான் அதிகம்.. சரியான நேரத்தில் தரப்படும் சரியான மருந்து நோயினை சரிசெய்வது போல சரியான மனிதர்களின் வழிகாட்டுதல் கள் நம் வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சரியாக தீர்க்க உதவும்.

Elite Management Consulting Services

## இருபத்து இரண்டாவது நரகாசுரன் - Neglecting The Health
## ஆரோக்கியத்தில் அக்கறையின்மை



ஆரோக்கியத்தில் அக்கறை இன்றி இருப்பது. அனைத்தையும் விட எனக்கு தொழில் தான் முக்கியம் என்ற பல நேரங்களில் நாம் இருப்பதுண்டு. நம்முடைய காலத்திற்கு பிறகும் நம்முடைய தொழில் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு முக்கியமாக நம்முடைய உடல்நிலை ஆரோக்கியமாக இருக்க வேண்டும். நீங்கள் பயன்படுத்தும் வாகனத்தை பெட்ரோல் இல்லாமல் அல்லது சக்கரத்தில் காற்று இல்லாமல் சிறிது தூரம் இயக்குவதே கடினம் அதே போல் நம் உடலுக்கும் சரியான நேரத்தில் தேவையானதை வழங்கும் போது உங்களால் நீண்ட தூரம் பயணிக்க முடியும்.



## இருபத்து நான்காவது நரகாசுரன் - Not setting Income Goals
## தனக்கான வருமானத்தை தீர்மானிக்காமல் இருப்பது

ஒரு வியாபரத்தில் எதிர்பாரபாராத செலவுகள் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம். ஆனால் எதிர்பாராத வருமானம் நிச்சயமாக ஏற்படாது. எனவே செலவுகளை விட நாம் ஏற்படுத்த வேண்டிய வருமானத்தை நிச்சயமாக தீர்மானித்து தினசரி அதனை ஆய்வு செய்ய வேண்டும்.

## இருபத்தைந்தாவது நரகாசுரன் - Wrong Things at Right Time
## சரியான நேரத்தில் தவறான செயல்களை செய்வது



நிறுவனத்தின் நேரமும் நமக்கான நேரமும் ஒன்று அல்ல. நாம் வேறு நிறுவனம் வேறு.. நமக்கு பிரச்சனைகள் மற்றும் சூழ்நிலைகளை காரணம் காட்டி நம்முடைய சுய விருப்பத்திற்காக நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் போது நிறுவனம் சார்ந்த உற்பத்தி மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்தையும். அது பாதிக்கும். நமக்கு ஆயிரம் பிரச்சனைகள் இருந்தாலும் நம்முடைய பங்களிப்பை நிறுவனத்தில் தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் சரியாக வழங்கினால் முன்னேற்றம் சீராக இருக்கும்..



## இருபத்தாறாவது நரகாசுரன் - Not Planning daily schedules
## தனக்கான தினச்சரியங்களை திட்டமிடாமல் இருப்பது

நேரம் தான் தேவைகளை தீர்மானிக்கிறது, சரியான நேரத்தில் தரப்படும் உணவு உடலை வளர்க்கிறது. தவறான நேரத்தில் தரப்படும் உணவு உடலை பாதிக்கிறது.நாம் நிர்வகிக்கும் நிறுவனத்திலும் நம்முடைய தினசரி வேலைகளை திட்டமிடா விட்டால் நிறுவனமும் நிர்வாகமும் பாதிக்கப்படுகிறது.நிர்வாகி சரியான முறையில் செயல்படும் போது நிர்வாகமும் சரியான முறையில் வளர்ச்சி அடைகிறது.

## இருபத்தேழாவது நரகாசுரன் – Not preparing the self and team for future அடுத்த கட்ட இலக்குகளுக்கு தன்னையும் தன் குழுவையும் தயார் செய்யாமல் இருப்பது



நிறுவனத்தின் வளர்ச்சி என்பது நிகழ்காலத்தை பொறுத்து மட்டுமே அமைவதில்லை. மாறாக எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் நிர்வாகத்தையும் தயார்படுத்துதலில்தான் நிறுவனத்தின் வளர்ச்சியும் சிறப்பாக அமைகிறது. கட்டிடத்தின் அஸ்திவாரத்தினை எவ்வளவு உறுதியாக அமைக்கிறோமோ அந்த அளவிற்கு உயரத்தையும் அதிகரிக்க முடியும்

### இருபத்தெட்டாவது நரகாசுரன் - Lagging on Execution
### திட்டங்களை முறையாக செயல்படுத்தாமல் இருப்பது



நம்முடைய கனவுகளும் கற்பனைகளும் உயிர் பெறுவது நம்முடைய செயல்கள் மூலம்தான் அதனால்தான் உலகின் தலைசிறந்த சொல் செயல் என்கின்றனர். செயல் ஆக்கம் பெறும்போது அந்த ஆற்றலால் முன்னேற்றம் ஏற்படுகிறது. இருக்கின்ற இடத்திலேயே இருந்துவிட்டால் மரம் செல்லரித்துபோய்விடும் அதனை பயன்பாட்டில் வைக்கும் போது காலத்திற்கும் பயன் அளிக்கிறது. நிறுவனத்தின் முன்னேற்றமும் நம்முடைய செயல்களின் உருமாற்றத்தில் தான் இருக்கிறது.



### இருபத்தொன்பதாவது நரகாசுரன் - Not spending time for self
### தனக்காக நேரம் ஒதுக்காமால் இருப்பது

விறகு வெட்டும் நேரத்தை விட கோடாரி கூர்மையை சீர் செய்யும் நேரம் மிக முக்கியமானது. எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் நாம் சற்று நிதானமாக யோசிக்க, நடவடிக்கைகளை சீர் செய்ய நமக்காக நேரம் ஒதுக்குவது அவசியம். எனவே சுய மேம்பாட்டிற்காக எப்போதும் நேரம் ஒதுக்குங்கள்.

### முப்பதாவது நரகாசுரன் - Not Recognising others
### மற்றவர்களை அங்கிகாரம் செய்யாமல் இருப்பது



காலம் முழுவதும் இந்த நிறுவனத்திற்கு வேலை செய்து நான் என்ன பலன் அடைந்தேன்.. என்ற வார்த்தை உங்களது பணியாளர்களிடம் இருந்து வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். மனித வாழ்க்கையில் அனைத்தும் இருந்தும் ஒரு அங்கீகாரம் இல்லாவிட்டால் இந்த மனம் இருண்டு போய்விடும். நம் வாழ்கையில் வெளிச்சத்தை கொண்டுவர உடன் இருக்கும் மனிதர்களுக்கு கொஞ்சம் வெளிச்சத்தில் பங்கு பெற செய்வதால் அவர்களது உள்ளம் ஆனந்தமடையும்.. அனைவரையும் அவர்களது பங்களிப்பிற்கு ஏற்ப அங்கீகரிப்போம்...

Elite Management Consulting Services

